செ.வெ.எண்: 223 நாள்: 20.04.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் சிகிச்சை பெறுபவர்களுக்கு தேவையான அளவு ஆக்ஸிஜன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.**

**கொரோனா பாதிப்பு அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு கோவிட் தடுப்பு வழிமுறைகளை பொதுமக்கள் முழுமையாக பின்பற்ற வேண்டும்.**

**மாவட்டத்தில் கொரேனா பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை நகராட்சி, சந்தைப்பேட்டை அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கோவிட் தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி நடைபெற்று வரும் பிளஸ் 2 செய்முறை தேர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.04.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

பிளஸ் 2 செய்முறை தேர்வுகள் 16.04.2021 முதல் 23.04.2021 வரை இரண்டு கட்டங்களாக நடைபெற்று வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பிளஸ் 2 செய்முறை தேர்வு கோவிட் தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி நடைபெற்று வருகின்றனவா என்பது குறித்து இன்றையதினம் சந்தைப்பேட்டை அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 123 பள்ளிகளில் இரண்டு கட்டங்களாக செய்முறைத் தேர்வுகள் நடைபெறுவதுடன், இதில் 13,018 மாணவ, மாணவியர் கலந்துகொண்டுள்ளனர்.

பள்ளிகளுக்கு தேர்விற்கு வரும் மாணவர்களை ஆசிரியர்கள் தெர்மல் ஸ்கேனர் மூலம் பரிசோதனை செய்து, கிருமிநாசினி வழங்கி, சமூக

இடைவெளியுடன் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர். அந்த வகையில் மாணவர்கள் சமூக இடைவெளியை கடைபிடித்து, முகக்கவசம் அணிந்து தேர்வு எழுதி வருகின்றனர். இதன்பயனாக கொரோனா தடுப்பு வழிமுறைகள் பள்ளிக்கல்வித்துறையின் மூலம் தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

மேலும் நேற்றையதினம் சென்னை பள்ளிக்கல்வி இயக்கக இணை இயக்குநர் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நேரடியாக வருகை தந்து கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி செய்முறைத் தேர்வுகள் நடைபெறுவது குறித்தும் ஆய்வு செய்துள்ளார்கள். ஆசிரியர் மற்றும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு உரிய கொரோனா தடுப்பு விதிமுறைகளின் படி தேர்வுகள் நடைபெற்று வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் சூழ்நிலையில் பொதுமக்கள் அனைவரும் கொரோனா தொற்றை தடுக்கும் வகையில் முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியை கடைபிடித்தல் போன்றவற்றை தவறாது பின்பற்ற வேண்டும்.

கொரோனா நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் சிலிண்டர் மூலம் ஆக்ஸிஜன் வழங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சென்ற ஆண்டே கூடுதலாக ஆக்ஸிஜன் சிலிண்டர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள சிறுநீரக ஒப்புயர்வு மையத்தை முழுவதுமாக கொரோனா சிகிச்சை மையமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே இங்கு 6 கே.எல் டேங்க் அமைக்கப்பட்டிருந்ததுடன், தற்பொழுது கூடுதலாக ஒரு 6 கே.எல் டேங்க்

அமைக்கப்பட்டு மொத்தம் 12 கே.எல் டேங்க் அமைக்கப்பட்டு, அதில் ஆக்ஸிஜன் நிரப்பும் வசதி ஏற்படுத்தப்பட்டு, தேவையான அளவு ஆக்ஸிஜன் கையிருப்பில் உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 2 வாரத்திற்கு முன்பு கொரோனா பாதிப்பு விகிதம் 1.6 சதவீதத்தில் இருந்தது. தற்பொழுது கொரோனா பாதிப்பு விகிதம் 3 சதவீதம் அளவில் உள்ளது. ஏற்கனவே தினமும் 1,000 முதல் 1,500 எண்ணிக்கையில் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்பொழுது கொரோனா பரிசோதனையின் எண்ணிக்கை 2,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்னதாக புதுக்கோட்டையில் கோவிட் வழிகாட்டு நெறிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புதுக்கோட்டை நகரில் இயங்கும் தனியார் வணிக வளாகங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் விஜயலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், நகராட்சி பொறியாளர் ஜீவாசுப்பிரமணியன், வட்டாட்சியர் முருகப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**